1995 ஏப்ரல் 3]

செல்வி எல். சுலோசனா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த அவையிலே ஆற்றிய முதல் உரையிலேயே கூட மேட்டுப்பாளையத்தில் அரசு கலைக் கல்லூரி அமைக்க வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளேன். மேட்டுப்பாளையம் நகரத்தைச் சுற்றி சுமார் 20 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளடக்கிய பல கிராமங்கள் உண்டு. பல பெரிய சிறிய தொழிற்சாலைகளில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் உள்ளனர். மேலும் மலைவாழ் மக்கள், அரிசன மக்கள் அதிக அளவில் உள்ளனர். தற்சமயம் அவர்களுடைய குழந்தைகள் கோவைக்குத்தான் கல்லூரிக்காகச் செல்ல வேண்டியுள்ளது. வசதியற்ற அவர்கள் உயர் கல்வியைப் பெற முடியாத சூழ்நிலை உள்ளதால் அரசு சார்பில் ஒரு கலைக் கல்லூரியையோ அல்லது தொழில் நுட்ப கல்லூரியையோ அரசு அமைக்க முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் கல்வி நிறுவனங்கள் அதிக எண்ணிக்கையில் இருக்கின்றன. அந்த மாவட்டத்திலே இருக்கிற மக்கள் பயன் பெறுகிற வகையிலே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. வசதியற்றவர்களுக்காகத்தான் அங்கே அரசு 4 கலைக் கல்லூரிகளை நடத்திக் கொண்டிருக்கிறது. அரசு கலைக் கல்லூரியே இல்லாத மாவட்டங்கள் தமிழகத்தில் இருக்கின்றன. இப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் ஆராய்ந்து எங்கெங்கே வாய்ப்பு இருக்கின்றதோ அங்கே தொடங்கத்தான் அரசு முயற்சி எடுக்க முடியும். கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் அரசு கலைக் கல்லூரி தொடங்குகின்ற வாய்ப்பு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 196, திரு. என்.ஆர் .சிவபதி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

196—

திருச்சி மத்திய கூட்டுறவு வங்கியின் கிளை அமைத்தல்

***36531—**திரு. என். ஆர். சிவபதி :

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தொட்டியம் ஒன்றியம், மணமேடு கிராமத்தில் திருச்சி மத்திய கூட்டுறவு வங்கியின் கிளை ஒன்று அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தொட்டியம் ஒன்றியம், மணமேடு கிராமத்தில் திருச்சி மத்திய கூட்டுறவு வங்கியின் கிளை ஒன்றை அமைக்க அரசிடம் தற்போது திட்டம் ஏதும் இல்லை.

திரு. என். ஆர். சிவபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணமேடு பகுதி கிராம மக்கள் அதிகமாக வியாபாரிகளாக இருக்கின்றார்கள். சேமிப்பில் அதிகம் ஆர்வம் உள்ளவர்கள். அருகில் எங்கும் வங்கிகள் இல்லை. தொட்டியத்தில் உள்ள வங்கிக்கு செல்ல வேண்டுமென்றால் சுமார் 15 கிலோ மீட்டர் தூரமும் மற்றும் முசிறிக்கு செல்லவேண்டும் என்றால் 10 கிலோ மீட்டர் தூரமும் தாண்டி மக்கள் செல்லவேண்டியிருக்கிறது. அங்கே வாழுகின்ற மக்கள் வட்டிக்கு அதிகமாக விடுகிறார்கள். அவர்களுடைய சேமிப்பிற்கு ஏற்ப பாதுகாப்பான வசதியும் அவர்களிடத்தில் இல்லை. அதைக் கருத்தில் கொண்டு, அந்த கிராமத்திலே கூட்டுறவு வங்கி அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணமேடு கிராமம் ஒரு சிறிய பஞ்சாயத்துக்கு உட்பட்ட கிராமம். அந்த கிராமத்தின் மக்கள் தொகையே 3448 பேர்கள் தான் இருக்கிறார்கள். மணமேடு கிராமத்திலிருந்து மேற்கே 7 கிலோ மீட்டர் தொலைவில் திருச்சிராப்பள்ளியினுடைய மத்திய கூட்டுறவு வங்கியினுடைய கிளை ஒன்று தொட்டியத்திலும், அதன் கிழக்கே 7 கிலோ மீட்டர் தொலைவில் முசிறியிலும் இயங்கி வருகின்றன. இரண்டு கிளைகளுக்கும் மணமேடு கிராமம் வழியாகத்தான் பேருந்து செல்ல வேண்டும். ஒரு பேருந்துக்கும் இன்னொரு பேருந்துக்கும் இடையில் 10 நிமிடங்களுக்குள்ளே அங்கே பேருந்து நடமாட்டமும் இருக்கிறது. அது மட்டும் அல்ல, அந்த வங்கியினுடைய கிளைக்கு அந்த ஊரிலிருந்து செல்லவேண்டும் என்றால் 10 நிமிடங்களுக்கு மேலே ஆகாது. அந்த கிராமத்தில் நெசவு தொழில் மற்றும் பயிர்த்தொழில் மட்டுமே செய்கிற மக்கள் இருக்கிறார்கள். ஒரு மத்திய கூட்டுறவு வங்கியினுடைய கிளைகள் திறக்கப்படவேண்டும் என்றால், இந்த அவையிலேயே பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறேன், பல்வேறு நிபந்தனைகள் இருக்கின்றன. அந்த நிபந்தனைகளையெல்லாம் கூட கணக்கிலே வைத்து பார்க்கிறபோது, இந்த மணமேடு என்ற கிராமத்தில் கிளை ஒன்றைத் திறப்பதற்கு எந்த விதமான வசதியும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மணமேடு கிராமத்தில் 3500 மக்கள் தொகைதான் இருக்கிறது என்று சொன்னார்கள். அந்தப் பகுதியில் கிட்டத்தட்ட 10 ஆயிரம் மக்களுக்கு மேல் அதிகமாக வசிக்கிறார்கள்.

அருகில் உள்ள கிராமங்களிலிருந்து மக்கள் அனைவரும் வந்து செல்லுகிற ஒரு வியாபார தலமாக கூட அந்தப்பகுதியில் அது இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்தப் பகுதியில் நெசவாளர்கள் அதிகமாக வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் இயல்பாகவே சேமிக்கும் பழக்கம் கொண்டவர்கள். மேலும் அப்பகுதியில் காவிரி கரையில் உள்ள விவசாயிகள், பணப்பயிர்களான வாழை, கரும்பு, வெற்றிலை போன்றவைகளை பயிரிடுகிறார்கள். அதில் வரும் பணத்தை சேமிக்கும் வகையில், வருகின்ற காலத்திலாவது மணமேடு கிராமத்தில் திருச்சி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் கிளை ஒன்றை அமைக்கும் திட்டத்திற்கு அரசு முன்னுரிமை வழங்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மணமேடு கிராமத்தில் 3448 மக்கள் தொகை தான் இருக்கிறது என்று நான் சொன்னேன். 10 ஆயிரம் பேர்கள் இருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். ஆகவே வாதத்திற்காக 10 ஆயிரம் பேர் என்று வைத்துக் கொண்டாலும்கூட அங்கே வைப்புத் தொகைகளை—கூட்டுறவு வங்கியின் கிளை ஒன்று திறக்கப்படவேண்டும் என்றால் சேர்த்து தரப்படவேண்டும். முதலிலே 30 லட்சமும் அடுத்த ஆண்டு 20 லட்சமும் ஆக 50 லட்சம் ரூபாய், இரண்டாண்டுக் காலத்திலே அங்கே வைப்புத் தொகை ஒன்று தரப்பட வேண்டும். அது மட்டும் அல்லாமல் மணமேடு கிராமத்தில் லட்சுமி வங்கியினுடைய கிளை ஒன்று அங்கேயே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்தக் கிளையே தற்போது எந்த அளவுக்கு தன் காலிலேயே நிற்கும் என்ற அளவிலேகூட ஐயப்பாடு இருக்கிறது. ஆகவே மறு பரிசீலனை செய்தாலும் கூட இப்போது அங்கே ஒரு கிளையை துவக்குவதற்கான சூழ்நிலை இல்லாத காரணத்தால், அங்கே கிளையை துவக்குவதற்கு எந்தவிதமான உத்தேசமும் அரசுக்கு கிடையாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 197, திரு. நா. சா. பழனிசாமி இருக்கையில் இல்லை.

வினா எண் 198, திரு. ஜெ. பாலகங்காதரன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

198—

சிவகாசிக்கு கூட்டு குடிநீர்த் திட்டம்

*** 21056—**திரு. ஜெ. பாலகங்காதரன்:

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—